**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110279

1. District மாவட்டம் : சென்னை  PS: காவல்நிலையம் : V&AC, CC-I  Year: ஆண்டு : 2020  FIR No.: மு.த.அ. எண் : 08/2020/AC/CC-I  Date: நாள் : 14.12.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the  Sections பிரிவுகள்: Sec 7(a)
   (ii) Act சட்டம்: Prevention of Corruption (Amdt) Act 2018  Sections பிரிவுகள்: 102 CrPC
   (iii) Act சட்டம்: CrPC  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் : 14.12.2020  Date to : நாள் வரை : 14.12.2020
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் : 15.50 hrs  Time to : நேரம் வரை : 18.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 14.12.2020  Time நேரம் : 18.45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : கண்காணிப்பாளர் அலுவலகம், சுற்றுச்சூழல் இயக்ககம்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி : மாடி 5.தளம், வடக்கு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு C.K. குமரன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் :
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு :
   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation தொழில் : துணை ஆட்சியர் குழு அலுவலர்
   (g) Address முகவரி : மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. எஸ்.பாண்டியன், கண்காணிப்பாளர், சுற்றுச்சூழல் இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 14.12.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 14/12/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 14.12.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [illegible]
Rank: நிலை ........................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
குற்ற சிறப்பு பிரிவு-1,
[illegible]
சென்னை-16

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை குற்ற எண்.08/2020 முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி (கலம் 12)

நான் இன்று (14.12.2020) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நகர சிறப்பு பிரிவு-1ல் மாலை 18.45 மணியளவில் பொறுப்பில் இருக்கும் போது சென்னை துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.சி.கே.குமரன் என்பவர் சென்னை அண்ணாசாலை பனகல் மாளிகை என்ற முகவரியில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் இயக்குநரகம் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 14.12.2020-ம் தேதி நடைபெற்ற திடீராய்வு இரு துறை கூட்டு தணிக்கை சம்மந்தமாக ந.க.எண்.214/ 2020 நாள் 14.12.2020-ன் படியான அறிக்கையினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு-1 காவல் கூடுதல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அளித்தார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நகர சிறப்பு பிரிவு-1 காவல் கூடுதல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி மேற்படி திரு.சி.கே.குமரன் அவர்கள் அளித்த அறிக்கையில் காணப்பட்ட புகார் தன்மைக்கேற்ப இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது. சென்னை துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.சி.கே.குமரன் அவர்களின் அறிக்கையின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் சி.கே.குமரன், துணை ஆய்வு குழும அலுவலர் சென்னை பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1 ஆலந்தூர், சென்னை-16. கடித எண். ந.க எண் 214/2020 நாள் 14.12.2020 அய்யா, பொருள் இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - பனகல் மாளிகை சுற்றுசூழல் இயக்குநரக அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 14.12.2020 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை நகர சிறப்பு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 14.12.2020-ம் தேதி சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, பனகல் மாளிகை, சுற்றுசூழல் இயக்குநரக கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.88,500/- கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை மகஜர் மற்றும் ஆவணங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின்

விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, (ஒம்-சி.கே.குமரன்) மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், சென்னை மாவட்டம். இணைப்பு- மேற்கண்டவாறு சென்னை அண்ணாசாலை பனகல் மாளிகை என்ற முகவரியில் அமைந்துள்ள சுற்றுச்சுழல் இயக்ககம் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இடைதரகர்கள் மூலமாகவும், நேரடியாகவும் சுற்றுச்சுழல் சம்மந்தமான பணிகளுக்கு இந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில், சென்னை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.K.குமரன், என்பவர் மதியம் சுமார் 02.45 மணியளவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1ல் ஆஜரானார். பின்னர் மதியம் சுமார் 03.30 மணியளவில் 1. திரு.C.K.குமரன், துணை ஆய்வு குழும அலுவலர், சென்னை-1, 2. S.P.லாவண்யா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 3. திரு.T.கந்தசாமி, காவல் ஆய்வாளர், மற்றும் காவல் ஆளினர்கள் சகிதம் அரசு வாகனத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து புறப்பட்டு சைதாப்பேட்டை பனகல் மாளிகைக்கு அருகே மாலை 03.30 மணிக்கு வரப்பட்டது. பின்னர் மாலை 03.50 மணிக்கு சுற்றுச்சுழல் இயக்ககம் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து திடீர் இருதுறை கூட்டு தணிக்கை மேற்க்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகம் பனகல் மாளிகையின் தரைதளத்தில் தெற்கு பகுதியில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் இருதுறை கூட்டுத் தணிக்கை அலுவலர்கள் நுழைந்ததும் தங்களை அறிமுகம் செய்து கொண்டு சுய சோதனை செய்தனர். பின்னர் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களிடம் பின்வருமாறு சோதனை செய்யப்பட்டனர். மேலும் தீடீர் கூட்டுத்தணிக்கையின் போது கீழ்கண்ட பட்டியலில் உள்ள நபர்கள் தங்கள் கைவசம் வைத்திருந்த தொகைக்கு அவர்கள் தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு-

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | திருமதி.கே.பத்மாவதி, அலுவலக உதவியாளர் | ரூ.1000/- |
| 2. | திரு.பாண்டியன், கண்காணிப்பாளர் | ரூ.2050/- |

| | | |
|---|---|---|
| 3. | திரு.கனகராஜ், துணை கனிணி புரோகிராமர் | ரூ.610/- |
| 4. | திரு.பாலசந்திரன், உதவியாளர், (ஒப்பந்த அடிப்படை) | ரூ.190/- |
| 5. | எஸ்.கிருஷ்ணவேணி, தட்டச்சர் | ரூ.1000/- |
| 6. | காவ்யாஸ்ரீ, உதவியாளர் | ரூ.640/- |
| 7. | திரு.பார்த்தசாரதி, உதவியாளர் | ரூ.450/- |
| 8. | திரு.நகமுகன், கண்காணிப்பாளர், (ஒப்பந்த அடிப்படை) | ரூ.650/- |
| 9. | திரு.கிருஷ்ணன், (ஒப்பந்த அடிப்படை) உதவியாளர் | ரூ.3750/- |
| 10. | திரு.ஏ.பி.ஜெயக்குமார், (ஒப்பந்த அடிப்படை) | ரூ.2500/- |
| 11. | ஏன்.மனோகரன்,பதிவறை எழுத்தர் | ரூ.2000/- |
| 12. | தி.இந்திராதேவி, தகவல் அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) | ரூ.150/- |
| 13. | எம்.வினோத்குமார், புரோகிராம் அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) | ரூ.1500/- |
| 14. | முனைவர்.ஆர்.பிரசன்னவெங்கடேஷ் ரீசர்ஜ் அசோசியேட் (ஒப்பந்த அடிப்படை) | ரூ.2500/- |
| 15. | முனைவர்.கே.முத்துகுமார், திட்ட அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) | ரூ.1370/- |
| 16. | முனைவர்.ஸ்ரீதேவி கற்பகவல்லி திட்ட அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) | ரூ.1310/- |
| 17. | ஆர்.ஜான்மனோகர், உதவி நிர்வாக பொறியாளர் | ரூ.1500/- |
| 18. | எம்.நல்லமுத்துபிள்ளை, உதவி நிர்வாக பொறியாளர் | ரூ.2000/- |
| 19. | ஆர்.மோகன், அலுவலக உதவியாளர் | ரூ6000/- |
| 20. | ஆர்.முத்துகுமார், ஓட்டுநர் | ரூ30/- |
| 21. | தி.மூர்த்தி, அலுவலக உதவியாளர் | ரூ.260/- |

இந்த அலுவலகத்தில் பணியில் இருந்த திரு.எஸ்.பாண்டியன் என்பவரது இருக்கையின் அருகில் இருந்த F.No.125/A/EMAT/2018 கோப்பினை எடுத்து

சோதனை செய்த போது அதன் உள்ளே கத்தையாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை துணை ஆய்வு குழும அலுவலர் எடுத்து எண்ணி பார்க்க ரூ.5,000/- (ரூ.500x10) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.எஸ்.பாண்டியன் என்பவரிடம் கேட்க அவர் முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அது கையூட்டாக பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் கைப்பற்றப்பட்டது. அவரை மேற்க்கொண்டு விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக தகவல் கூறியதால் அவர் அலுவலகத்திற்கு வந்த வாகனம் Honda Activa (White Colour) TN 10 Y 8568 துணை ஆய்வுக்குழு அலுவலரின் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அந்த வாகனத்தின் உள்ள பெட்டியில் சோதனை செய்தபோது இரண்டு கத்தைகளாக பணம் காணப்பட்டது. மேற்படி பணத்தை துணை ஆய்வுகுழு அலுவலர் எடுத்து எண்ணி பார்க்க அதில் மொத்தம் ரூ.83,500/- (Rs.500x167) இருந்தது. மேலும் அந்த பெட்டியை சோதனை செய்ய அதில் 1.CASH Voucher No.001, Pay to J.Saravanan, Rs.5,00,000/- Receipt Invoice Details:- TCD/PSS/KK NAGAR/001 dt., 06.11.2020 Total Amount Rs.5 Lac., 2. Receipts Invoice Details:- TCD/PSS/KK NAGAR/001 dt., 06.11.2020 Total Amount Rs.1,49,187/-, 3. Indian Bank, Saidapet Branch A/c No.423804795, 4. State Bank of India, Valasaravakkam Branch A/c No.67208102692, (Tr.S.Pandiyan and Tr.P.Sivashanmugam, Joint Account) 5.Indian Bank, Saligramam Branch, A/c No. 437807042 (A.Latha Pandiyan) ஆகிய ஆவணங்கள் காணப்பட்டன. மேற்படி பணம் மற்றும் ஆவணங்கள் குறித்து திரு.பாண்டியன் என்பவரிடம் கேட்க பணத்தை பற்றி முண்ணுக்கு பின் முரணாக தகவல் கூறியதால் மேற்கூறிய பணம் ரூ.83,500/- கையூட்டாக பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் வங்கியின் சேமிப்பு கணக்கு புத்தகங்கள் -3 மற்றும் இரண்டு கேஷ் வவுச்சர்கள் ஆகியவையும் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலகத்தில் வருகைப்பதிவேடு வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இருதுறை கூட்டுத்தணிக்கையின் போது மேற்குறிப்பிட்டவாறு உள்ள கணக்கில் வராத மொத்தபணம் ரூ.88,500/- வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கையானது மாலை 18.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி இருதுறை கூட்டுத்தணிக்கையானது பொதுமக்களுக்கோ மற்றும் அலுவலக பணிகளுக்கோ எந்தவித பாதிப்பும் இன்றி நல்ல முறையில் முடிக்கப்பட்டது. (ஒம்) S.P லாவண்யா கூடுதல் காவல் கண்காணிப்பாளர், நகர சிறப்பு பிரிவு-1 ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. (ஓம்) திரு.C.K.குமரன், துணை ஆய்வு குழும அலுவலர், சென்னை-1 (ஓம்) T.கந்தசாமி காவல் ஆய்வாளர் நகர சிறப்பு பிரிவு-1 ஊதக துறை சென்னை-16 (ஓம்) ச.பாண்டியன், கண்காணிப்பாளர், (ஓம்) திரு.ப.கனகராஜ், உதவி நிரல் அமைப்பாளர் (ஓம்) திருமதி.கிருஷ்ணவேணி, தட்டச்சர் (ஓம்) காவியஸ்ரீ, உதவியாளர் (ஓம்) என். மனோகரன், பதிவறை எழுத்தர் (ஓம்) இரா.ஜான்மனோகரன், உதவி நிர்வாக பொறியாளர் (ஓம்) திரு.மு.நல்லமுத்துபிள்ளை, உதவி நிர்வாக பொறியாளர், சுற்றுசூழல் இயக்குநரகம், பனகல் மாளிகை, சென்னை அய்யா மேற்படி அறிக்கையினை இன்று 14.12.2020-ம் தேதி மாலை 18.45 மணிக்கு பெற்று அறிக்கையின் தன்மைகேற்ப ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சென்னை நகர பிரிவு-1 குற்ற எண் 08/2020 பிரிவு 102 குவிமுச உ/இ பிரிவு 7(a) ஊழல் தடுப்புச் சட்டம் 1988-ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018-ன்படி வழக்கு (தி.கந்தசாமி) பதிவு செய்யப்பட்டது (ஓம்) தி.கந்தசாமி காவல் ஆய்வாளர் நகர சிறப்பு பிரிவு-1, ஊத (ம) க துறை சென்னை-16. இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, சென்னை துணை ஆய்வு குழும அலுவலர் திரு.சி.கே.குமரன் அவர்களது கடித எண். ந.க.எண்.214/2020 நாள் 14.12.2020 அதன் இணைப்பு இருதுறை கூட்டுத் தணிக்கை மகஜர் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு நீதிமன்றம், சென்னை அவர்களுக்கும் பிற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

14/12/2020

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
City Special Unit-I MKN Road,
Alandur, Chennai - 600 016.
(Near St. Thomas Mount Metro Railway Station)